என்ன காரணம்? இரு வகை ஆசிரியர்களுக்கும் இடையே வித்தியாசம் காட்டாமல், சர்க்கார்ப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் எல்லாப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனியார்த் துறைப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகை கொடுக்க முடியுமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து கைவிட்டுவிட்டது.

நாட்டு மருந்து பரிசோதனைக் கல்லூரி

* 452 கேள்வி.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனத்திலுள்ள தனி நபர் ஒருவர், நாட்டு மருந்து பரிசோதனைக் கல்லூரி ஒன்று நிறுவுவதற்கு, மதுராந்தகம் தாலூகா ஆத்தூர் கிராமத்தில் R.S No. 405-ல் உள்ள 25 ஏக்கர் நிலங்கோரி 9—10—1965-ல் செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டருக்கு மனு செய்துள்ளாரா?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) The area requested for assignment is not available.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நாட்டு மருந்துப் பரிசோதனைக் கல்லூரி ஒன்று கட்டுவதற்காக மனை கோரப்பட்டு, அதற்கு அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டபிறகு, அந்த மனையை வேறு அரசாங்க அலுவலகத்திற்காக ஏற்பாடு செய்வதாகச் சொல்லிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு எதிரிலேயே பல ஏக்கர் நிலங்கள் காலியாக இருக்கின்றனவாம். அதை யாவது கொடுத்து, அங்கே இதை ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் இதைப்பற்றித் தகவல் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். அந்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் கட்டுவதற்கு மனுப் போட்டவருக்கு இப்பொழுது வேறு இடம் கொடுக்கலாம் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

Compensatory allowance to Medical Officers

* 453 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have any proposal, to sanction payment of any compensatory allowance to medical officers with L.I.M. or G.C.I.M. qualifications, employed in dispensaries of Indian or Indigenous Medicines under local bodies; and

(*b*) if so, the details thereof?